# கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் திருவுருவச் சிலை திறப்பு!

முதல் பக்கத் தொடர்ச்சி

ஊர்வலக் குழுவினரின் செலவில் அமைக்கப்பட்டது. அப்போதைய பொதுப்பணித் துறை அமைச்சரான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில் முதலமைச்சரான பேரறிஞர் அண்ணா அவர்களால் 14.1.1969 அன்று திறந்து வைக்கப்பட்டது. மேலும், என்.எஸ். கிருஷ்ணன் அவர்களது திருவுருவச் சிலை ஜி.என். செட்டி சாலையில் கட்டப்பட்ட மேம்பாலம் பணிக்காக 26.2.2008 அன்று அகற்றப்பட்டது. பின்னர், மேம்பாலப் பணிகள் முடிவுற்று ஜி.என். செட்டி தெரு, திருமலைப் பிள்ளை சாலை சந்திப்பின் அருகில் அமைக்கப்பட்டது.

**கலைவாணர் அரங்க வளாகத்தில் புதுப்பிக்கப்பட்டு, மாற்றி நிறுவப்பட்டுள்ள கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் திருவுருவச் சிலை திறப்பு**

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களின் குடும்பத்தினர், அவரது திருவுருவச்சிலையை அவ்விடத்திலிருந்து அகற்றி சென்னை வாலாஜா சாலையில் உள்ள கலைவாணர் அரங்க வளாகத்தில் நிறுவ வேண்டும் எனக் கோரிக்கை வைத்தார்கள்.

அக்கோரிக்கையினை ஏற்று, கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களின் திருவுரு வச் சிலை தற்போது இருக்கும் இடத்திலிருந்து பாதுகாப்பாக அகற்றி சென்னை, வாலாஜா சாலையில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கலைவாணர் அரங்க வளாகத்தில் நிறுவப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் 23.6.2025 அன்று அறிவி த்தார்.

அந்த அறிவிப்பின்படி, கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களின் திருவுருவச் சிலை சென்னை, கலைவாணர் அரங்க வளாகத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டு, மாற்றி நிறுவப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் இன்றையதினம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு. மகேஷ் குமார், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ். முருகன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர்

வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களின் குடும்ப த்தினர், நடிகை செல்வி குமாரி சச்சு, நடிகர்கள் நாசர், கருணாஸ், சரவணன், . போஸ் வெங்கட் உள்ளிட்ட திரைத் துறையை சார்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.



கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி தி.மு.க. சார்பில் தமிழ்நாடு தலைகுனியாது மாபெரும் பொதுக்கூட்டம் 3.2.2026 அன்று அண்ணா திடல் தொழுதூரில் நடைபெற்றது. அமைச்சர் சி.வி.கணேசன் தலைமை வகித்திட மங்களூர் கிழக்கு ஒன்றியக் கழக செயலாளர் வீ.அமிர்தலிங்கம் வரவேற்புரையில் வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். இதில் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

### தென்காசி தெற்கு மாவட்டம்– செங்கோட்டை நகர தி.மு.க. சார்பில்

# மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில்!

தென்காசி.பிப். 6 -

தென்காசி தெற்கு மாவட்ட மற்றும் செங்கோட்டைய நகர தி.மு.க. சார்பில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவ ணக்கநாள் பொதுக்கூட்டம் செங்கோட்டை தாலுகா அலுவலகம் அருகில் உள்ள அறிஞர் அண்ணா திடலில் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பளர் வே.ஜெயபாலன் தலைமையில், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மா. செல்லத்துரை, ஆறுமுகச்சாமி,ஷேக்தாவூது, முத்துபாண்டி, ஜேசுராஜன், மாவட்ட துணை செயலாளர் கனிமொழி, பொருளாளர் ஷெரீப், பொதுக்குழு உறுப்பினர்கள் ரஹீம், சாமித்துரை, தமிழ்ச்செல்வி, மாவட்ட விவசாய அணி துணை செயலாளர்கள் காதர் அண்ணாவி, சண்முகராஜா , மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை தலைவர் ஆபத்துக்காத்தான், மாவட்ட அயலக அணி தலைவர் நசீர், மாவட்ட மகளிரணி தலைவர் பேபி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நகர செயலாளர் ஆ.வெங்கடேசன் வரவேற்புரையாற்றினார். நிகழ்ச்சியை நகர இளைஞரணி அமைப்பாளர் காஜா முகைதீன் தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் முன்னாள் எம்.எல்.ஏ பி.எச். மனோஜ்பாண்டியன்,கழக செய்தி தொடர்பாளர் வழக்கறிஞர் அ.சரவணன், தலைமைக் கழக பேச்சாளர்கள் போடி. கலைச் செல்வன், சாகுல் ஹமீதுகான், வேங்கைசந்திரசேகர், கடையநல்லூர் இஸ்மாயில், ஆயிரப்பேரிமுத்துவேல், வெல்டிங்மாரியப்பன், செங்கை குற்றா லிங்கம், வாடியூர் மரியராஜ் ஆகியோர் உரையாற்றினர்.

நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் அழகுசுந்தரம், திவான்ஒலி, சுரேஷ், சீனித்துரை, ரமேஷ், அன்பழகன், சேக்முகம்மது, ஜெயாஜயப்பன், மணிகண்டன், நகர செயலாளர்கள் சாதிர், அப்பாஸ், இத்தாலியன்பீரப்பா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கிருஷ்ணராஜா பேரூர் செயலாளர்கள் முகம்மது உசேன், ராஜராஜன், முத்தையா, சுடலை, சங்கர் (எ)குட்டி, கோபால், வெள்ளத்துரை, சிதம்பரம், பண்டாரம், முத்து, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் அழகுதமிழ்சங்கர், கோமதிநாயகம், செங்கோட்டை நகர கழக நிர்வாகிகள் அவைத்தலைவர் காளி, துணை செயலாளர் ராஜா, பொருளாளர் தில்லைநட ராஜன், மாவட்ட பிரதி நிதிகள் பாஞ்ச்பீர்முகம்மது, மணிகண்டன், சுப்பிரமணியன், அணி துணை அமைப்பாளர்கள் ஐவேந்திரன் தினேஷ், சுப்பிரமணியன், வேலுச்சாமி, சங்கர்கணேஷ், வார்டு செயலாளர்கள் பாலு, மாரியப்பன், சேட்(எ) சேக்மதார், கருப்பசாமி, வேலுமணி, குட்டிராஜா, லூாக்ஜெ யக்குமார், விஜயபாரதன், கோவிந்தராஜ், மணிகண்டன், அப்துல்ரஜீத் (எ) காந்திபாபு, பீர்முகம்மது, உள்பட உள்ளாட்சி பிரதி நிதிகள், வார்டு பிரதிநிதி கள், கழக முன்னோடிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட துணை செயலாளர் கென்னடி நன்றி கூறினார்.

### தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளத்தில்

# வடக்கு மாவட்ட மருத்துவரணி சார்பில் இலவச மருத்துவ முகாம்!

### அமைப்பாளர் வைகை ஸ்கேன் டாக்டர் பாண்டியராஜ் ஏற்பாட்டில்!

தேனி, பிப். 6 -

தேனி மாவட்டம் பெரியகுளம் விக்டோரியா நினைவு அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் திமுக வடக்கு மாவட்ட மருத்துவ அணி மற்றும் மதுரை அப்பல்லோ மருத்துவமனை இணைந்து இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. திரவியம் கல்வி குழுமத்தின் நிறுவனர், வைகை ஸ்கேன்ஸ் மற்றும் வடக்கு மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர் டாக்டர் பாண்டியராஜ். ஏற்பாட்டில் நடைபெற்ற இம்முகாமிற்கு கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் எல்.முக்கையா தலைமை வகித்தார்.

சரவணக்குமார் எம்.எல்.ஏ. முகாமினை துவக்கி வைத்தார். மாவட்ட அவைத்தலைவர் T பி.டி செல்லப்பாண்டியன், நகர செயலாளர் முகமது இலியாஸ், வடக்கு ஒன்றிய செயலாளர் பாண்டியன், தேனி நகர பொறுப்பாளர்கள் பாலமுருகன், நாராயண பாண்டியன், நகராட்சி தலைவர் சுமிதா சிவக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் முத்துராமலிங்கம், தேனி நகராட்சி தலைவர் ரேணு பிரியா பாலமுருகன், விடுதலை சிறுத்தைகள் கட்சி பெரியகுளம் சட்டமன்ற தொகுதி மாவட்ட செயலாளர் சுசி தமிழ்பாண்டியன், நிர்வாகிகள் பாசறை மது, நகர செயலாளர் ஜோதி முருகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த முகாமில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, இதய அறிவியல், குழந்தை மருத்துவ இருதயவியல், மகப்பேறு மற்றும் பெண்ணோயியல், இரைப்பை குடல், புற்றுநோயில், கதிரியக்கவியல், குழந்தை மருத்துவம், எலும்பியல், நுரையீரல், நரம்பியல், சிறுநீரகவியல், உயிர் சத்துக்கள் மதிப்பீடு, சீரற்ற ரத்தசக்கரை, இசிஜி, எக்கோ , பாப்ஸ் மியர், அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், குழந்தை மருத்துவ எக்கோ நுரையீரல் செயல்பாடு சோதனை உள்ளிட்ட மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அப்போலோ மருத்துவ குழுவினர் உட்பட 37 சிறப்பு மருத்துவர்கள் கலந்து கொண்டு பொது மக்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சை அளித்தனர். மேலும் பெண்கள் மார்பக புற்றுநோய் கண்டறிதல் மற்றும் பெண்கள் சார்ந்த பிரச்சினைகளை கண்டறிதல் மற்றும் பரிசோதனைக்காக அப்பல்லோ மருத்துவ குழுமத்தில் இருந்து மருத்துவ வசதிகள் அடங்கிய பிரத்யோக வாகனம் வரவழைக்கப்பட்டிருந்தது.

வைகை ஸ்கேன் மற்றும் அப்பல்லோ ஸ்கேன் மூலம் பொதுமக்களுக்கு இலவசமாக அனைத்து விதமான ஸ்கேன் எடுக்கப்பட்டது. பெரியகுளம் அதன் சுற்று வட்டார பகுதியில் இருந்து ஏராளமான பொதுமக்கள் இம்முகாமில் கலந்து கொண்டு இலவசமாக மருத்துவ பரிசோதனைகள் மேற்கொண்டனர்.

இம்முகாமில் இருதய பிரச்சனைகள் உடைய குழந்தைகள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் இலவச சிகிச்சை அளித்திட பரிந்துரைக்கப்பட்டது.

அப்பல்லோ மார்க்கெட்டிங் பொது மேலாளர் பிரேம் டேனியல், அப்பல்லோ மருத்துவ முகாம் ஒருங்கிணைப்பாளர் மேலாளர் பூபதி ஆகியோர் மருத்துவ ஒருங்கிணைப்பு செய்திருந்தனர்.




தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 57 வது நினைவு தினத்தை முன்னிட்டு தெற்கு மாவட்ட அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.நிகழ்வில் தொகுதி பார்வையாளர் டாக்டர் கலை கதிரவன், கனிமொழி, கென்னடி, ஷெரீப், சேசுராஜன், சாமித்துரை, தமிழ்ச்செல்வி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வி.ஆர். அருணகிரி
**பிப்ரவரி 6 (2016)**



இளம் வயதிலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

குடியாத்தம் நகரத்தில் மாவட்டக் கழகப் பிரதிநிதியாக பொறுப்பு வகித்தவர்.

குடியாத்தம் நகர கூட்டுறவு வங்கி இயக்குநராக பொறுப்பு வகித்தவர்.

1962ஆம் ஆண்டு விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு, பேரறிஞர் அண்ணா அவர்களுடன் வேலூர் சிறையில் இருந்தவர். அத்துடன், கழகம் அறிவித்த இந்தி எதிர்ப்பு உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி

## மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா எம்.எல்.ஏ., அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணியின் திருப்பூர் தெற்கு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**திருப்பூர் தெற்கு மாவட்டம்**

தலைவர் - தி. கார்த்திகேயன் 7/61, இராமச்சந்திராபுரம் அஞ்சல், நெகமம் வழி, உடுமலைப்பேட்டை - 642120, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - கே. தங்கவேல் 1/127, சோமவாரப்பட்டி, பெதப்பம்பட்டி அஞ்சல், உடுமலைப்பேட்டை - 642205, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் - எ. கணேசன் 2/206, பொட்டையம்பாளையம், தொட்டம்பட்டி, உடுமலைப்பேட்டை - 638205, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) வீ. சோமசுந்தரம் 12/114, தெற்கு வீதி, மாக்கினாம்பட்டி அஞ்சல், பொள்ளாச்சி - 642003, திருப்பூர் மாவட்டம். 2) கே. செல்வக்குமார் 1/44, விநாயகர் கோவில் வீதி, ஜமீன் கோட்டாம்பட்டி அஞ்சல், பொள்ளாச்சி - 642006, திருப்பூர் மாவட்டம். 3) வ. பொன்னுச்சாமி 658, பங்களா தெரு, காரத்தொழுவு, மடத்துக்குளம் - 642203, திருப்பூர் மாவட்டம். 4) த. வரதராஜன் 19, எஸ்.கே.கே. நகர், சங்கர் நகர், தாராபுரம் ரோடு, உடுமலைப்பேட்டை - 642126, திருப்பூர் மாவட்டம். 5) த. அர்ஜுனன் 148, சீனிவாசா வீதி, உடுமலைப்பேட்டை - 642126, திருப்பூர் மாவட்டம். 6) சி. ரங்கநாதன் 4/99, உல்லாஸ் நகர், தேவனூர்புதூர், உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம் - 642207. 7) அ. சண்முகராஜ்குமார் 123, ஆர்.வி.ஜி. நகர், மோதிராபுரம், சூளேஸ்வரன்பட்டி அஞ்சல், பொள்ளாச்சி - 642006, திருப்பூர் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 04-02-2026.

**அன்னியூர் சிவா, எம்.எல்.ஏ.**
செயலாளர்
தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தடா தனசேகரன்
**பிப்ரவரி 6 (1992)**



ஜெயலலிதா அரசின் “தடா” சட்டத்தைக் கண்டித்து சென்னையில் நடைபெற்ற மாபெரும் பேரணியில் போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் குண்டடிபட்டு உயிரிழந்தார் சென்னை 3வது வட்ட இளைஞர் அணியின் தம்பி தனசேகரன்.

“தம்பி! உன் தியாகம்; தமிழ்நாட்டு மக்களை ஒருங்கிணைத்து; தடா தர்பார் ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவதற்கான முன்னுரையாக அமையட்டும்! எனக் கூறி; “அந்த ஆதிதிராவிட இனத்து அடலேறாம் தனசேகரனுக்கு வீரவணக்கம் செலுத்துவோமாக” என தலைவர் கலைஞர் அவர்கள் உடன்பிறப்புக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.